# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
# CC No.96/2017

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw16/Pw4 |
| Name | : இளங்கோவன் |
| Father/Husband's Name | : கிருஷ்ணன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07.04.2026.

**முதல் விசாரணை:**

நான் வேலூர் போதை நுண்ணறிவு பிரிவு காவல் துணை கண்ணாகிப்பாளராக பணிபுரிந்து 29.02.2024 ல் பணி ஓய்வு பெற்றுள்ளேன். நான் தற்போது கடலூரில் வசித்து வருகிறேன். கடந்த 5.10.2015 ம் தேதி நான் மறைமலைநகர் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது காவல் நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் காமராஜர் என்பவர் முதல் விசாரணை செய்து வைத்திருந்ததை எனது காவல் உதவி ஆய்வாளர் தன்ராஜ் என்பவர் மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு விசாரணை செய்தார். அவர் சென்னை அரசு மருத்துவமனைக்கு அவர் சென்று உரிய சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அதசா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர்

விசாரித்து வைத்திருந்ததை 09.10.2015 ம் தேதி நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் எனது காவல் நிலையத்திற்கு இந்த வழக்கை விபத்துள்ளாகிய எதிரி ரவிந்திரகுமார் பிகாரா என்பவரை காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து இரு நபர் பிணையில் விடுவித்தேன். 04.01.2016 ம் தேதி இந்த வழக்கில் செங்கல்பட்டு போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. முருகேசன் அவர்களை அணுகி இந்த வழக்கில் விபத்துக்குள்ளான இருசக்கர வாகனம் ஹீரோ ே◌ஹாண்டா பிளண்டர் பிளஸ் பதிவு எண் டி.என்.09 ஏ எக்ஸ் 6320 என்ற வாகனத்தை ஆய்வு செய்ததற்கான சான்று பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த மோட்டார் வாகன சான்று அறிக்கை **அதசா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே வட்டார போக்குவரத்து அலுவலகம் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.மனகுமார் அவர்களை அணுகி இந்த வழக்கில் விபத்துக்குள்ளாக்கிய டாடா இண்டிகா கார் பதிவு எண் டி.எண்.19 எ 5758 என்ற வாகனத்தை ஆய்வு செய்ததற்கான சான்று பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த மோட்டார் வாகன சான்று அறிக்கை **அதசா.ஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புறபட்டு சென்னை அரசு மருத்துவ கல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவர் திரு.சதீஷ் அவர்களை சந்தித்து இறந்து போன திரு.ஜெயசந்திரனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த சான்று பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த உடற்கூறாய்வு அறிக்கை **அதசா.ஆ 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் என்னுடைய

விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவுகள் 279 304(எ) இதச வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் புகார் தாரரிடம் இருந்து புகார் பெறவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu